[22nd August 1961

Panchayat Board (Sittarpatti)

*1337 *Q.*—SRI M. D. THIYAGARA PILLAI on behalf of SRI N. R. THIYAGARAJAN) கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா, சித்தார்பட்டியில் பஞ்சாயத்து போர்டு ஏற்படுத்தக் கோரி 12-7-1958-ல் ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனு என்னவாயிற்று ?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Collector of Madurai has reported that he did not receive the petition, dated 12th July 1958, requesting the constitution of a panchayat for the Sitharpatti village. He has also reported that action as however been taken on a petition from the villagers of Sitharpatti, dated 8th January 1958, requesting the constitution of a panchayat for their village and that a panchayat has been constituted for the Sitharpatti village.

Land Survey (Voimedu village)

*1338 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் ரெவின்யூ அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலுகாவைச் சேர்ந்த வாயுமேடு கிராமத்திலுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் பூராவும் சர்வே செய்தாகிவிட்டதா ?

(இ) இல்லையானால் எவ்வளவு நிலம் சர்வே ஆகியிருக்கிறது ?

(உ) நிலமற்ற விவசாயிகளுக்கு அதில் எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது ?

(எ) இதற்காக என்ன விகிதாசாரத்தில் எவ்வளவு பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது ?

(ஐ) பாக்கி நிலங்களை என்ன செய்ய உத்தேசம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: (அ) Yes, Sir.

(இ) Does not arise.

(எ) An extent of 576·02 acres out of the extent of 657·63 acres fit for cultivation has been assigned to 315 persons.

(உ) The land value has been fixed at Rs. 100 per acre. Of the total sum of Rs. 57,602 to be collected, a sum of Rs. 16,335 has been remitted by the assigness so far.

(ஐ) The extent of 81·61 acres left over has been set apart for communal and public purposes.

SRI A. VEDARATHNAM: 2,500 எக்கருக்கு மேல் அந்தப் பிரதேசத்திலே புறம்போக்கு நிலம் இருக்கிறதே, இப்பொழுது ஒரு சிறு பகுதிதானே அஸைன் செய்யப்பட்டிருக்கிறது. இது போக பாக்கி இருக்கிற நிலங்களையெல்லாம் நிலம் இல்லாத விவசாயிகளுக்கு அஸைன் செய்யலாமல்லவா. அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU: உபயோககரமாக இருக்கக் கூடியது இதுதான். மற்றவையெல்லாம் பொட்டல்காடு என்று சொல்லப்படுகிறது.